செய்தி வெளியீடு எண்:506 நாள்:27.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுறப் பிரதானக் கால்வாய்களில் முதல் போக பாசனத்திற்குச் சுழற்சி முறையில் நனைப்பு ஒன்றுக்கு 76.23 மில்லியன் கன அடி வீதம் 9 நனைப்புகளுக்கு மொத்தம் 686.07 மி.க.அடிக்கு மிகாமல் 29.07.2021 முதல் 10.12.2021 வரை 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில் சுமார் 8000 ஏக்கர் பாசனப் பரப்பு பயன்பெறும்.

**அரசு கூடுதல் தலைமை செயலாளர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9